# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF MAHILA COURT, PERAMBALUR.

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br><br>Preliminary Register<br>**Sessions** | **Spl.Sessions Case No. : 12 /2021** |

| | | | |
|---|---|---|---|
| **Deposition of witness for** | **Prosecution** | : | **P.W. : 4** |
| | Defence | : | D.W. : |
| | Court | : | C.W. : |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | காமாட்சி | வயது | : | |
| த/பெ. (அ) | : | | தொழில் | : | |
| க/பெ. | | | | | |
| ஊர் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | ஜாதி | : | |
| மாவட்டம் | : | | | | |

Starting Time: 1.00 PM

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of 27/05/2022**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் தற்போது களரம்பட்டி கிராமத்தல் வசித்து வருகிறேன். அசா. 1 பழனியம்மாள் என் மருமகள் ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் என் பக்கத்து வீட்டில் வசிக்கிறார். நான் மங்கூனிலிருந்து வேலைக்கு போயிவிட்டு வந்தேன். மார்கழி மாசம் வேலைக்கு போயிவிட்டு வந்தேன் , சாட்சி மீண்டும் கார்த்திகை மாசம் என்று சொல்கிறார். தேதி எனக்கு தெரியாது. நான் வேலை செய்து விட்டு வீட்டுக்கு வந்தேன். மணி மதியம் 1–1.30 மணி இருக்கும். எங்கள் வீட்டில் வெளியில் ஒரு அறையும் உள்ளே ஒரு அறையும் உள்ளது. அப்போது நான் கால் , கை கழுவி விட்டு வீடடிற்குள் போனேன். அப்போது ஆஜர் எதிரி எங்கள் வீட்டிலிருந்து வெளியில் வந்தார். அப்போது ஏண்டா தம்பி இந்நேரத்தில் இங்கு வந்தாய் என்று ஆஜர் எதிரியிடம் கேட்டேன். அதற்கு

ஆஜர் எதிரி என் பிள்ளை இங்கு இருக்குதா என பார்க்கவந்தேன் என்று கூறினார். நான் வீட்டிற்குள் போன போது என் பேத்தி(சாட்சி பாதிக்கப்பட்ட சிறுமியின் பெயரை சொன்னார்) பாதிக்கப்பட்ட சிறுமி வீட்டில் படுத்திருந்தார். ஆஜர் எதிரி பிள்ளையதானே பார்க்க வந்தேன் என கூறினார் என்பதாலும் ஆஜர் எதிரி பாதிக்கப்பட்ட சிறுமிக்கு அண்ணன் முறை தானே வேண்டும் என்பதாலும் நான் ஒன்றும் சொல்லவில்லை. என்ன நடந்தது என்று கடவுளுக்கு தான் தெரியும். அதன்பிறகு பாதிக்கப்பட்ட சிறுமி மாசமாக இருந்துள்ளார். பள்ளிக்கூடத்தில் பாதிக்கப்பட்ட சிறுமி மயக்கம் போட்டு விழுந்துவிட்டார். பாதிக்கப்பட்ட சிறுமியிடம் ஆசிரியர் கேட்டபோது ஆஜர் எதிரிதான் காரணம் என்று சொல்லியுள்ளார். அதன்பிறகு ஆசிரியர் போலீசாருக்கு தகவல் சொல்லி போலீசார் பாதிக்கப்பட்ட சிறுமியை அழைத்து வந்துள்ளனர். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்றார்.

Ending Time: 1.25 PM